**களனி பல்கலைக்கழகம் - 2021**

**-----------------------------------------------**

**1. நிதிக் கூற்றுகள்**

**--------------------**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**-----------------------------------------**

களனிய பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 107 (5) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில்154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிறுவனத்தின் நிதிக் கூற்றுகளினூடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------------------------------

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

----------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பில் கணக்காய்வாளரின் அவதானிப்புகள்

-------------------------------------------------------------------------------------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக

கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| ஏற்புடைய தரத்தின் தொடருடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ)இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக செலவினம் ரூபா.1,582,224,300 ஆன சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் மற்றும் செலவினம் ரூபா.293,815,186 ஆன நூலகப் புத்தகங்கள், பட்டப்படிப்பு லோகு முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருப்பினும், மேலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதன்படி ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை அரசு துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இக் குறைப்பாடுகளை எதிர்வருங் காலங்களில் செவ்வைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை |
| (ஆ) மீளாய்விற்கான ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா.140,000,000 ஆன மூலதன அளிப்புகள் தொடர்பில் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம், நிதிக் கூற்றுகளில் அடையாளம் காணல் மற்றும் அளவிடல் மேற்கொள்ளப்படவில்லை. | மூலதன அளிப்புகள் தொடர்பிலான அடையாளம் காணுதல் மற்றும் சமர்ப்பித்தல் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 11 பிரகாரம், மேற்கொள்வறத்கு எதிரகாரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகள் மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

### 1.6.1 கிடைக்கப்பெறுவனவைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| கல்வி நடவடிக்கைகளின் பொருட்டு வெளிநாடு சென்ற பின்னர் 2011 தொடக்கம் 2019 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்குள் முறிகளை மீறிய 04 விரிவுரையாளர்களிடமிருந்து மொத்தம் ரூபா.22,158,260 தொகையில் எந்தவொரு தொகையும் அற- | பல்கலைக்கழக கட்டுப்பாட்டுச் சபையிடம் அறிவித்து முறிகளை மீறிய விரிவுரையாளர்களிடம் அறிவிப்பதற்கு சில காலம் எடுப்பதுடன், முறிகளின் கணக்கிடல் தொடர்பான தெளிவுபடுத்தல்கள் முடிவடைந்த பின்னர் கொடுப்பனவு ஆரம்பிக்கப்படும். | தாமதமின்றி அறவிடல்களை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், கொடுப்பனவுகளை தவறவிடப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் சட்டத்துடனான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

விடப்படவில்லை என்பதுடன், 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் 24 விரிவுரையாளர்களிடமிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா.166,494,177 ஆகும்.

### 1.6.2 செலுத்தப்பட வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் அண்டு தொடக்கம் 2021 ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் பல்வேறு கடன்கொடுநர்களிடம் வழங்கியிருந்த ரூபா.2,628,608 ஆன 196 காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டிருப்பினும், 2021 திசெம்பர் 31 வரை அவற்றை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | மீள செலுத்துவதற்காக வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ள காசோலைகளுக்கு கொடுப்பனவுகளை செய்வதற்கும், 06 மாதங்களை விஞ்சியுள்ள ஏனைய காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் வருமானத்தில் எடுப்பதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | தாமதமின்றி கடன்கொடுநர்கள் மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் நிதி ஒழுங்குவிதிக் கோவை<br>(i) நிதி ஒழுங்குவிதிகள் 110 | நட்டங்கள் சேதங்கள் தொடர்பான ஆவணம் பராமரிக்கப்படவில்லை. | எதிர்வருங் காலங்களில் நட்டங்கள் சேதங்கள் தொடர்பான பதிவேடு பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதி பிரகாரம், நட்டங்கள் சேதங்கள் பதிவேடு பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) நிதி ஒழுங்குவிதிகள் 371 | 2015 ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா.80,405,752 ஆன 38 முற்பணங்கள் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் சீராக்குவதற்கு 2022 மே மாதம் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | ஆராய்ச்சி கருத்திட்டங்கள் முடிவுறாமை காரணமாகவும், மூலதன முற்பணப் பணிகள் முடிவடைந்தவுடன் சீராக்குவதற்கும் ஏனைய முற்பணங்களை தீர்ப்பதற்கும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | நிதி ஒழுங்குவிதி பிரகாரம, முற்பணம் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) நிதி ஒழுங்குவிதிகள் 571 | இரண்டு ஆண்டுகள் விஞ்சிய மொத்தப் பெறுமதி ரூபா.20,664,876 ஆன கேள்வி வைப்புகள், பாதுகாப்பு வைப்புகள் மற்றும் 05 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் முடிவடைந்மத மொத்தம் ரூபா ரூ.23,221,500 ஆன நூலக வைப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | கேள்விகள் மற்றும் பாதுகாப்பு வைப்புகளை விடுவிப்பதற்கு வேண்டுகோள்களை முன்வைத்த வைப்புச் செய்யுநர்களுக்கு துரிதமாக விடுவிப்பதற்கும், நூலக வைப்புகளின் அறவிடல் பணத் தொகை மீள செலுத்துவதற்கும், வேண்டுகோள் முன்வைக்காத வைப்புகளை வருமானத்தில சேர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| புலமைப் பரிசில், அன்பளிப்புகள் மற்றும் வேறு 53 நிதியங்களில் பணம் முதலீடு செய்வதன்மூலம், பல ஆண்டுகளாக உழைத்துக்கொண்ட வருமானத்தில் மொத்தம் ரூபா.11,286,893 ஆன வட்டி வருமானம் மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரை சம்பந்தப்பட்ட நோக்கங்களின் பொருட்டு உபயோகப்படுத்தியிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட கல்வி ஆண்டில் ஒவ்வொரு புலமைப் பரிசிலுக்கான தேர்வுமுறைகளை மாணவர்களால் அண்மித்துக்கொள்ளாத சந்தர்ப்பங்களில் அல்லது புலமைப் பரிசில் வழங்கும் பொருட்டு கல்விப் பிரிவுகள் மற்றும் பீடங்கள் என்பவற்றிலிருந்து வேண்டுகோள்கள் முன்வைக்காத சந்தர்ப்பங்களில் புலமைப் பரிசில் வழங்கப்படுவதில்லை. | புலமைப் பரிசில் வழங்குவதற்கு முடியுமான வகையில் நோக்கங்களை காலோசிதமாக மீளாய்வு செய்து பணம் உபயோகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.115,872,244 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா.409,245,685 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.293,373,441 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சி 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் உள்ளக வருமானம் ரூபா.130,369,985 ஆல் குறைவடைதலும் ஆளுக்கான வேதனாதிகளின் செலவினம் ரூபா.178,121,927 ஆல் அதிகரித்தலும் அடிப்படை காரணங்களாகின.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஆசிய அபிவிருத்தி வங்கி கருத்திட்டத்தின் அனுசரணையின் கீழ் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா.மில்லியன் 3690 ஆல் பல்-கலைக்கழகத்தின் கணினி தொழில்நுட்ப பீடம் பொருட்டு கட்டிடத் தொகுதி நிருமாணி-க்கப்பட்டு வந்தது. அந்தக் கட்டிடத் தொகுதி நிருமாணிக்கும் வரை அந்தப் பீடத்தை பல்-கலைக்கழகத்தில் பராமரிக்கை-யில் ஏற்பட்ட உள்ளக பிரச்சினைகள் காணரமாக 2019 சனவரி தொடக்கம் வாடகை கட்டிடமொன்றில் அந்தப் பீடத்தை பராமரிக்கப்பட்டதால் அன்றைய திகதி தொடக்கம் 2022 சனவரி வரை மொத்தம் ரூபா.100,194,000 ஐ கட்டிடங்களின் வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. பல்கலை-க்கழகத்தில் உள்ள கட்டிட-ங்களின் ஊடாக காலோசிதமாக வசதிகளை முகாமைத்துவம் செய்துகொள்வதற்கு கவனம் செலுத்தப்படாமையால் அதிகள-விலான பணத்தொகை வாடகை-யாக செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. | கட்டிடங்களின் தொகுதியை நிருமாணித்து முடிவுறுத்தும் வரை, வர்த்தக மற்றும் முகாமைத்துவ கல்வி பீடம் மற்றும் விஞ்ஞான பீடம் என்பவற்றுக்குரிய கட்டிடமொ-ன்றில் தற்காலிகமாக போத-னைகளை நடாத்துவதற்கு திட்டமிடப்படினும், அந்தப் பீட-ங்களின் இடவசதி தேவை-ப்பாடுகள் அதிகரித்தமையால் திட்டமிட்டவாறு உள்ளக ரீதி-யாக போதனைகள் மற்றும் செய்முறை வகுப்புகளை நடா-த்துவதற்கு முடியாமையும், தொடர்ச்சியாக மாணவர்களின் எதிர்பு ஆர்ப்பாட்டமும் காரணமாக கல்வி நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்வதற்கு தீர்வாக பீடத்தை தற்கா-லிகமாக பெற்றுக்கொண்ட கட்டித்தில் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் நிதியை பொருளாதார ரீதியாக பயனுள்ள வகையில் முகாமைத்துவம் செய்து செலவினங்களை குறை-த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ)களனிய பல்கலைக்கழகத்தின் 60 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா .2,216,085 பெறுமதியிலான 09 பொருட் வகைகளில் 4088 உருப்படிகள் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியிலும் களஞ்சியத்தில் காணப்பட்டன. | 2022 மே 30 ஆம் திகதியில் மேலும் ரூபா.1,804,335 பெறும-தியிலான 7 பொருட் வகை-களில் 2,853 உருப்படிகள் களஞ்சியத்தில் உள்ளன. | தேவையினை சரியாக அடையளாம் காணப்பட்டு கொள்வனவுகளை மேற்-கொள்வதற்கும் அரசாங்க நிதியை பயனுள்ளதாக உபயோகப்படுத்துவதற்கும நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 ஆம் ஆண்டில் 25 ஆராய்ச்சி பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா.7,714,000 ஆன ஒதுக்கீடு ஏற்பாடு செய்து கொண்டிருந்த போதிலும், அதில் 14 ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்ளாமை காரணமாக ரூபா.6,489,479 ஆன ஒதுக்கீடு பயன்படுத்தியிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில் ஆரம்பித்த 2021 ஆண்டாகும்போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய 06 ஆராய்ச்சி பணிகளின் பொருட்டு ரூபா. 737,403 வழங்கிய போதும், 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நாட்களை நீட்டிக்கப்பட்டு ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. | இந்த ஆராய்ச்சி கருத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக 03 ஆண்டு காலப் பகுதி பெற்றுக்கொள்ள முடியுமென்பதால் எதிர்வருங் காலங்களில் இந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் முடிவுறுத்தப்படும். காலம் நீட்டிக்கப்பட்டிருந்த 06 ஆராய்ச்சி பணிகள் பொருட்டு நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுளஎன. | ஆராய்ச்சிகளுக்காக ஒதுக்கீடு செய்துள்ள நிதித் தொகையினை ஆகக் கூடியதாக உபயோகப்படுத்த வேண்டுமென்பதுடன், உரிய காலப் பகுதிக்குள் ஆராய்ச்சிகளை முடிவுறுத்தி அதன் பயன்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 ஆண்டுக்கு ஏற்புடையதாக பொருட் ஒப்பாய்வு அறிக்கையில் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கு ஏற்புடையதாக காலம்கடந்த மற்றும் நட்டமாக அடையாளம் காணப்பட்டிருந்த செலவினம் ரூபா.4,204,684 ஆன 187 நுகர்வுப் பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. அதேபோன்று தேவைகளை அடையாளம் காணாது கொள்வனவுகளை மேற்கொண்டமையால் செலவினம் ரூபா.4,013,155 ஆன 446 இருப்பு உருப்படிகள் மெதுவாக அசைகின்ற மற்றும் வழங்கப்படாத இருப்புகளாக இருந்தன. மேலும் மிகை இருப்புகளாக காணப்பட்ட செலவினம் ரூபா.1,108 ,577 ஆன 179 இருப்பு உருப்படிகள் புத்தகங்களில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதுடன், குறை இருப்புகளாக அடையாளம் காணப்பட்டிருந்த செலவினம் ரூபா.970236 ஆன இருப்பு | குறை இருப்புகள், மிகை இருப்புகள், மெதுவாக அசைகின்ற இருப்புகள், வழங்கப்படாத இருப்புகள், நட்டம் ஏற்பட்ட மற்றும் காலம்கடந்த இருப்புகள் ஏற்படுவதற்கான காரணங்கள் நிதிக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குழுவின் பரிந்துரைகளுக்கமைவாக உரிய செவ்வைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும். | தேவை அடையாளம் காணப்பட்டு இருப்புகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். அதேபோன்று மிகை இருப்புகளை புத்தகங்களில் பதிவு செய்வதற்கும் குறை இருப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும். |

உருப்படிகள் 91 தொடர்பாக நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 3.3 கருத்திட்டங்கள் அல்லது மூலதன வேலை தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| தற்போதுள்ள கணினி நிலைய கட்டிடம் இடவசதி போதுமற்றதால் ரூபா.மில்லியன் 165 தொகை செலவிடப்பட்டு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையமொன்று 2 ஆண்டுகளில் நிருமாணிப்பதற்கு 2016 ஆம் ஆண்டில் தனிப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திடம் வழங்கியிருப்பினும், 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உரிய நிருமாணிப்புகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. | உத்தேச கட்டிடம் மாணவர்களின் எதிர்ப்புகள் காரணமாக உத்தேச இடத்தில் நிருமாணிக்க முடியவில்லை என்பதுடன், மீள காணி கொள்வனவு செய்வதற்கு அதிகமான காலம் எடுக்கப்பட்டதாலும், ஒப்பந்தம் பொறுப்பேற்ற அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் நிலவிய நிதி நெருக்கடியும் தாமதத்திற்கு காணரமாகயிது. | தாமதமின்றி நிருமாணிப்பு பணிகளை பூர்த்தி செய்துக்கொண்டு நோக்கங்களின் பொருட்டு பயன்படுத்தல் வேண்டும். |